# ஸ்ரீ அபிராமி உபாசகி அம்மாவின் அன்புக்கரங்கள்



15.11.2015 அன்று ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் முல்லைத்தீவு மாவட்டம் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியது. கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு பிரதேச மக்கள் இடம்பெயர்ந்து, பாடசாலைகளிலும், பொதுநோக்கு மண்டபங்களிலும் தங்கியிருந்தனர். இவர்களுக்கு உடனடியாக உலர் உணவுப்பொருட்கள் தேவைப்பட்டது. டென்மார்க் நாட்டில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அபிராமி உபாசகி அம்மா மக்களுடைய அவலங்களையும், தேவைப்பாடுகளையும் புகைப்படங்கள் மூலம் அறிந்த மறுகணமே தன் உதவிக்கரங்களினால் 980 குடும்பங்களுக்கு, தலா 1300 ரூபாய் பெறுமதியுள்ள பொருட்களும், இரண்டு வாரங்களுக்கு மக்களுக்கு மதிய மற்றும் இரவுபோசனமும் வழங்குவதற்கு அருளாசிபுரிந்தார். அம்மாவின் முல்லைத்தீவு மாவட்ட தொண்டர்களான கு.கௌசிகன் மூலம் உதவிகள் வழங்கப்பட்டது.

அத்தோடு 26.10.2015 அன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் உடையார் கட்டு, வள்ளிபுனத்தைச் சேர்ந்த எட்டு வறுமையான குடும்பங்களுக்கு கறவை மாடுகள், துவிச்சக்கர வண்டிகள், தையல் உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டது.











